இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 04.07.2026

# தறிகெட்டு அராஜகம் செய்யும் த.வெ.க.வினர் - 2

13. கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் அடகுவைத்த 28 சவரன் நகையை திருப்பித் தராமல் கூலித் தொழிலாளிக்கு கொலை மிரட்டல் விடுத்து வரும் த.வெ.க. பிரமுகர் ஜெகதீசன் மீது புகார் தரப்பட்டுள்ளது. எஃப். ஐ.ஆர். போடப்பட்டுள்ளது.

14. மதுரை திருப்பரங்குன்றத்தில் மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பாரின் உரிமையாளர் த.வெ.க.வைச் சேர்ந்தவர் என்பதே டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதற்குக் காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

15. நீலகிரி மாவட்ட த.வெ.க. பொறுப்பாளர் ரமேஷ், தனியார் நிதி நிறுவனம் நடத்தி மோசடி செய்ததாகவும், வசூலித்த பணத்தை திருப்பித் தராமல் மிரட்டல் விடுப்பதாகவும் மாவட்ட ஆட்சியரிடம் மக்கள் புகார் கொடுத்துள்ளார்கள்.

16. திருச்செங்கோடு அருகே சாலையில் நடந்து சென்ற பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார் த.வெ.க. நிர்வாகி நவீன். அவர் மீது புகார் தரப்பட்டுள்ளது.

17. மனமகிழ் மன்றங்களின் ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் எடுத்து வெளியிட்டு பணம் கேட்டு த.வெ.க.வினர் மிரட்டல் விடுப்பதாக உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் பதில் அளிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

18. விபத்தில் சிக்கிய கூலித் தொழிலாளியின் குடும்பத்துக்கு நிவாரண நிதி பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றிய சேலம் ராபின் என்பவர் மீது புகார் தரப்பட்டுள்ளது. புகாரை வாபஸ் வாங்கு என்று பெண் ஒருவரை மிரட்டியதாகவும் புகார் ஆகி இருக்கிறது.

19. ஆலந்தூரில் மகளிர் உடற்பயிற்சி மையத்தின் பொறுப்பாளராக இருந்த பெண்ணுக்கு ஆலந்தூர் வடக்குப் பகுதி த.வெ.க. செயலாளர் வேம்புலி பாலியல் தொல்லை கொடுத்தார். அவரை உடனடியாக காவல் துறை கைது செய்யவில்லை. தலைமறைவான வேம்புலியை ஏழு நாட்கள் கழித்து போலீஸார் கைது செய்துள்ளனர்.

20. போலி ஜி.எஸ்.டி. எண்களைப் பயன்படுத்தி பண மோசடி செய்ததாக த.வெ.க. நிர்வாகி அருண் மீது ஈரோட்டில் புகார் பதிவாகி உள்ளது. அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பாதிக்கப்பட்டவர் குடும்பத்துடன் ஈரோடு எஸ்.பி. அலுவலக வாசலில் தீக்குளிக்க முயற்சி செய்துள்ளார்.

21. இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி அருகே ஏழாம் வகுப்பு மாணவி மீது பைக்கில் வேகமாக வந்த இருவர் மோதினார்கள். அதில் மாணவி உயிரிழந்துள்ளார். பைக்கில் வந்த இருவரும் த.வெ.க.வைச் சேர்ந்தவர்கள் என்பதால் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி ஏர்வாடி தர்கா காவல் நிலையத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

22. திருவாரூர் பேருந்து நிலையத்தில் ஒரு பெண்ணிடம் திருத்துறைப்பூண்டி த.வெ.க. ஒன்றியச் செயலாளர் ஆனந்த் அத்துமீறியதாக புகார் ஆனது. ஆனந்த் கைது செய்யப்பட்டுள்ளார். இவரோடு அசோக் என்பவரும் கைதாகி இருக்கிறார்.

23. செங்கல்பட்டில் அமைச்சர் சரத்குமார் பங்கேற்ற நிகழ்ச்சிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களை த.வெ.க.வினர் தாக்கி செல்போன்களை பறித்துள்ளார்கள்.

24. சேலம் புதிய பேருந்துநிலைய நடைபாதையில் மாமூல் வசூலிக்கும் 45 ஆவது கோட்ட த.வெ.க. நிர்வாகி முரளியின் வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளது.

25. சைதாப்பேட்டை GEN Z கூட்டத்தில் பேசிய நிர்வாகிக்கு கொலை மிரட்டல் விடுத்த த.வெ.க. நிர்வாகிகள் குமாரவேல், ரவி மீது நடவடிக்கை எடுக்க சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டுள்ளது.

26. ஆத்தூர் அருகே தம்பம்பட்டியில் தடை செய்யப்பட்ட லாட்டரியை விற்பனை செய்ததாக த.வெ.க. நிர்வாகி கார்த்தி கைதாகி இருக்கிறார். இவர் அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபனுடன் இருக்கும் படம் வெளியாகி இருக்கிறது.

27. சேலத்தில் பெண்களை ஆபாசப் படம் எடுத்து மிரட்டிய த.வெ.க. பிரமுகர் மணிகண்டன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மாட்டியதும் த.வெ.க.வைச் சேர்ந்தவர் இல்லை என்று அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால் த.வெ.க. கட்சி சுவரொட்டிகளில் அவர் படம் பெரிதாக உள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் அவர் அக்கட்சிக்காகப் பணியாற்றி இருப்பது அம்பலம் ஆனது.

28. திருப்பூர் மாவட்டம் நொச்சிபாளையம் பகுதியில் காரில் கடத்தி வரப்பட்ட 100 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. தினேஷ் செபஸ்டியன், பெரியசாமி ஆகியோர் கைதானார்கள். இதில் பெரியசாமி த.வெ.க. உறுப்பினர்.

29. ரேசன் அரிசியைக் கடத்தி வந்து மக்களுக்கு நலத்திட்ட உதவி என்று கொடுத்துள்ளார் மதுரை த.வெ.க. எம்.எல்.ஏ. தங்கப்பாண்டி. இது தொடர்பாக மதுரை மாநகர் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் தரப்பட்டுள்ளது.

30. கிருஷ்ணகிரி த.வெ.க. எம்.எல்.ஏ. முகுந்தனைக் கண்டித்து அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆய்வு என்ற பெயரால் மூன்றாந்தர மனிதர்களுடன் வந்து, தனக்கு தொடர்பு இல்லாத தளி, ஓசூர் தொகுதிகளிலும் அராஜகம் செய்வதாக அரசு ஊழியர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

31. கோவை காந்திபுரத்தில் அமைச்சர் சம்பத்குமாரின் உறவினர் என்று சொல்லி பெட்ரோல் பங்க் ஊழியரை ஒருவர் தாக்கி இருக்கிறார். கேனில் பெட்ரோல் கேட்டுள்ளார் அந்த நபர். ஊழியர் தரவில்லை. ‘அமைச்சர் சம்பத்குமாரின் அண்ணன் மகன் நான். எனக்கே தரமாட்டாயா?’ என தாக்கி இருக்கிறார் அந்த நபர். பெட்ரோல் பங்க் ஊழியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

32. த.வெ.க. ஆட்சியில் குட்கா பொருட்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணனிடம் த.வெ.க. ஒன்றியச் செயலாளர் குணசேகரன் புகார் சொன்னார். அப்போது குட்கா வியாபாரிகளுக்கு ஆதரவாக திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் பேசிய ஆடியோ வெளியாகி உள்ளது.

33. புதுக்கோட்டையில் அமைச்சர் பர்வேஸ் உடன் பின்னால் காரில் வந்த த.வெ.கவினர், எதிரே வந்த காவல் ஆய்வாளர் காரில் மோதினார்கள். இதில் காவல் ஆய்வாளர் உஷா, ஓட்டுநர் சிவா ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அமைச்சருடன் 5 கார்களில் வந்தவர்களால் இந்த விபத்து ஏற்பட்டது.

34. முன்னாள் ‘கில்லி’ சரத் - இந்நாள் மாண்புமிகு சரத்குமார், பவுடர் தயாரிக்கும் வீடியோ வெளியானது. அந்த வீடியோவை வெளியிட்டதாக தனது பள்ளி நண்பர் சரண் ஜெயக்குமாருக்கு மிரட்டல் விடுத்துள்ளார். ‘தனது வீட்டின் முன் கத்தியுடன் சிலர் நடமாடுகிறார்கள்’ என்று போலீசில் புகார் கொடுத்துள்ளார் சரண் ஜெயக்குமார்.

**- விஜய் தனது ரசிகர்களிடம் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு கோட்டையில் தூங்கி விட்டார்.**

●●

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அரியலூர் மாவட்டப் பொருளாளர் வீர.புகழேந்தி தலைமையில் ம.தி.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

சென்னை, ஜூலை 4 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அரியலூர் மாவட்டம் ம.தி.மு.க.வைச் சேர்ந்த அரியலூர் மாவட்ட பொருளாளர் வீர.புகழேந்தி தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோ.பழனிவேல் உள்ளிட்ட ஜெயங்கொண்டம் நகர நிர்வாகிகள் - வார்டு செயலாளர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.



கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (3.7.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த அரியலூர் மாவட்டம், மாவட்ட பொருளாளர் வீர.புகழேந்தி அவர்கள், தலைமையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட துணைச் செயலாளர் கோ.பழனிவேல், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் அ.ஜாகிர்உசேன், நகர துணைச் செயலாளர் இளங்கோவன், ஜெயங்கொண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எ.இரவி, ஜெயங்கொண்டனம் நகரம், வட்டச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வேல்முருகன், ஜெயங்கொண்டம் நகர இளைஞர் அணி புருசோத்தமன், நகர மாணவர் அணி ராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அரியலூர் மாவட்ட செயலாளர் - முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், ஜெயங்கொண்டம் நகரச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

## தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்

# துறைமுகம் காஜா இல்லத் திருமணம்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகளுடன் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 4-

தஞ்சை மாவட்டம், திருபுவனம் ஹாஜி எம்.ஐ. சாதிக் பாஷா - ஹாஜிமா எஸ்.சைரா பானு ஆகியோரின் புதல்வர் எஸ். ஹனீப் கானுக்கும், கழக தலைமை நிலையச் செயலாளர் ஹாஜி துறைமுகம் கே.காஜா - ஹாஜிமா கே.காத்தூன் பீவி ஆகியோரின் பேத்தி - ஜனாப் எஸ்.முஹம்மது ரபீக் - ஜனாபா எம்.ஜமீல் பாத்திமா ஆகியோரின் புதல்வி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத்துக்கும் மணவிழா நாளை (5.7.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் சென்னை திருவேற்காடு, ஜி.பி.என். பேலஸில் நடைபெறுகிறது.

இத்திருமணம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளோடு கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை யில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்க்காடு நா.வீராசாமி, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி எஸ்.முருகன், எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, ஆர்.பத்மநாபன், பொன் தனபால், அலிசேக் மீரான், செய்யது மீரான்,

கழக எம்.பி.க்கள் எஸ். ஜெகத்ரட்சகன், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, பி.வில்சன், தமிழச்சி தங்கபாண்டியன், இரா.கிரிராஜன், அருண் நேரு, தங்க தமிழ்ச்செல்வன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம், சு.கல்யாண சுந்தரம், கே.ஆர்.என். ராஜேஷ்குமார், டி.எம்.கதிர் ஆனந்த், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ச.முரசொலி, கே.இ.பிரகாஷ், த.செல்வம், எம்.எஸ்.தரணிவேந்தன், கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வர சாமி, ஆ.மணி, சி.என்.அண்ணா துரை, தே.மலையரசன், ராணி ஸ்ரீகுமார், ராஜாத்தி (எ) சல்மா, மாவட்டச் செயலாளர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வி.செந்தில் பாலாஜி, அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, மாதவரம் எஸ்.சுதர்சனம், தா.மோ. அன்பரசன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சு.முத்துசாமி, கே.ஆர்.பெரிய கருப்பன்,

எஸ்.எஸ்.சிவசங்கர், இரா.இராஜேந்திரன், மு.அப்துல்வகாப், காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம், க.சுந்தர், துரை.சந்திரசேகரன், சாக்கோட்டை க.அன்பழகன், இராணிப்பேட்டை ஆர்.காந்தி, க.செல்வராஜ், கோ.தளபதி, ஆர்.டி.சேகர், மயிலை த.வேலு, இ.பெ.செந்தில்குமார், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கீதாஜீவன், பி.மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன், டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சி.வி.கணேசன், என்.தினேஷ்குமார், திருத்தணி எஸ்.சந்திரன், கே.எஸ்.மூர்த்தி, ஏ.பி.நந்தகுமார், இல.பத்மநாபன், தே.மதியழகன், என்.நல்லசிவம், தொ.அ. ரவி, தோப்பு வெங்கடாசலம், தளபதி முருகேசன், பெ. பழனியப்பன், ஒய். பிரகாஷ், துரை.செந்தமிழ் செல்வன், தா.உதய சூரியன், ந.தியாகராஜன், டி.பழனிவேல், பூண்டி கே.கலைவாணன், வசந்தம் க.கார்த்திகேயன், க. வைரமணி, ரெ.மகேஷ், செஞ்சி கே.எஸ்.மஸ்தான், க.தேவராஜி, கே.எம்.ராஜு, ஈ.ராஜா, கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், நா.இராமகிருஷ்ணன், ஜெயபாலன், வி. ஜெகதீசன், ஆர்.லட்சுமணன், எஸ்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், இரா.ஆவுடையப்பன், நிவேதா எம்.முருகன், ம.கிரகாம்பெல், த. மனோதங்கராஜ்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ஓ.பன்னீர் செல்வம், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், முனைவர் கோவி.செழியன், சிவ. வீ.மெய்யநாதன், டாக்டர் கலை கதிரவன், ஆர். வைத்திலிங்கம், முனைவர் பால் மனோஜ் பாண்டியன், ஜீ.வி.மார்க்கண்டேயன், பி.எஸ்.சீனிவாசன், எஸ்.அம்பேத்குமார், ஆ.கடற்கரை ராஜ், ஆ.மகாராஜன், டாக்டர் வை.முத்துராஜா, கா.அண்ணா துரை, டி. சாமிநாதன், சூரியனூர் அ.சந்திரன், மொஞ்சனூர் ஆர்.இளங்கோ, சீ.கதிரவன், மு.திராவிட மணி, இரா.ஜெயராமகிருஷ்ணன், ஆ.சுதாகர், ஜி.ஆர்.வசந்தவேல், நா. அசோக்குமார், மு.ஜெயக்குமார், கௌதம் திராவிடமணி, கே. கே.கதிரவன், கா.கருணாநிதி, அ.செ.வில்வநாதன்,

நிர்வாகிகள் : டாக்டர் சுபேர்கான், டி.பி.எம். மைதீன்கான், ஜோசப் ராஜ். ஜெரால்டு, முனவர் ஜான், அன்வர்கான், என். பி.எம்.சேக் அப்துல்லா, வீ. விஜயகுமார், நூருல்லா, அடையார் ஷபீல், சாகுல் அமீது, கே.அன்வர் அலி, இராபர்ட் (எ) இராஜதுரை, இராஜேஷ் ஜெயின், எஸ்.டி.ஆர்.பொன்சீலன், எஸ்.ஷேக் இஸ்மாயில், ஆர்.சண்முகசுந்தரம், ஆர்.விடுதலை, என்.ஆர். இளங்கோ, பிரியா ராஜன், சைதை முகேஷ்குமார், இரா.சிவா, ஏ. எம்.எச்.நாஜிம், கே.ஆர். முருகேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நன்றி கூறுகிறார்.

# தமிழ்நாட்டிற்கான முதலீடுகளைக் குறிவைக்கும் ஆந்திரா!

### த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா? – பொருளாதார வல்லுநர்கள் கேள்வி!

சென்னை, ஜூலை 4 -

தமிழ்நாட்டிற்கான முதலீடுகளை ஆந்திரா குறிவைத்து வருகிறது. இதனை தடுக்க த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா என பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்கள் ஆலை அமைக்க வசதியாக சிப்காட் எனும் தொழிற்பூங்காவை தமிழ்நாடு அரசு கடந்த காலங்களில் இருந்து அமைத்து வருகிறது. அதன்படி, பல்வேறு பெரு நிறுவனங்களும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் தொழில் தொடங்கவே விரும்புகின்றன.

இச்சூழலில் கடந்த தி.மு.க. ஆட்சியின் போது திருவள்ளூர் மாநெல்லூர் பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப் பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பணிகள் நிறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் இப்பணிகள் முழு வேகத்தில் நடைபெறவில்லை.

இந்நிலையில், தமிழ்நாடு உடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்த நிறுவனங்களின் முதலீடுகளை, ஸ்ரீசிட்டி தொழிற்பூங்காவை விரிவாக்கம் செய்து ஈர்க்க ஆந்திரா முயற்சித்து வருகிறது. இதற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு உடனடியாக முட்டுக்கட்டை போட வேண்டும் என பொருளாதார வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே, பல்வேறு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் முதிர்ச்சியற்ற அரசு மற்றும் ஊசலாடும் அரசியல் சூழல் காரணமாக முதலீடுகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றியது குறிப்பிடத்தக்கது.